## துணை இயக்குநர்/வனஉயிரினக்காப்பாளர் புலிகள் காப்பகம் அம்பாசமுத்திரம் அவர்களின் திருத்திய செயல்முறை ஆணைகள்

முன்னிலை: செல்வி. சே. செண்பகப்பிரியா, இ.வ.ப,
துணை இயக்குநர்/வனஉயிரினக்காப்பாளர்

செ.மு.ஆ.எண்.ப1/3305/2020 நாள் .07.2023

பொருள் : பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் திரு. க. கணபதி, வனக்காப்பாளர்(இறப்பு) என்பவரது மகள் திருமதி G. தமிழ்ச்செல்வி, இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது - பணிவரன்முறை செய்வது -தொடர்பாக.

பார்வை 1 அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ1) துறை நாள் 08.03.2023.

2 முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.ண2/19226/2022 நாள் 12.06.2023.

******

கடல்வாழ் வனஉயிரின தேசிய பூங்கா, இராமநாதபுரம் கோட்டத்தில் பணிபுரிந்துவந்த திரு. க. கணபதி, வனக்காப்பாளர் பணியிலிருந்தபோது 01.04.1999 அன்று மரணமடைந்துள்ளார். காலஞ்சென்ற வனக்காப்பாளரின் மனைவி திருமதி க. கிருஷ்ணகுமாரி கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 08.01.2000-ல் மனு செய்துள்ளார். அவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரது மகள் திருமதி. க. தமிழ்ச்செல்விக்கு கருணை அடிப்படையில் பணியமர்த்த வேண்டி 28.03.2000-ல் மனு செய்திருந்தார். அந்நேரத்தில் அவரது மகள் 9வது வகுப்பு படித்து கொண்டிருந்தார். பின்பு அவரது மகள் 10வது வகுப்பு தேர்ச்சி பெற்ற பின் அதற்கான சான்றிதழ்களை 18.02.2002ல் சமர்ப்பித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்.169 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ2) துறை நாள் 30.08.2010ன்படி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் எண்.W2/18995/2015 நாள் 30.08.2010ன்படி கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக தேர்வு செய்து திருநெல்வேலி மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, தலைமை வனப்பாதுகாவலர், திருநெல்வேலி எண்.ப1/7189/2019 நாள் 18.07.2019 மற்றும் திருநெல்வேலி மாவட்ட வன அலுவலர் மற்றும் வனஉயிரினக்காப்பாளர் ந.க.எண்.ப1/5267/2019 நாள் 31.07.2019ன்படி திருநெல்வேலி வனக்கோட்டத்தில் 31.07.2019 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். மேற்படி இளநிலை உதவியாளரது தற்காலிக பணியினை வரன்முறை செய்வதற்கு கல்வி மற்றும் வயது ஆகியவற்றிற்கு விதித்தளர்வு தேவைப்படுவதால் துணை இயக்குநர் மற்றும் வனஉயிரினக்காப்பாளர் ந.க.எண்.ப1/3305/2020 நாள் 27.03.2023ன்படி கருத்துரு வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை-1ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் தொடர்பாக தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் 2023ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களின் பணிவரன்முறை தொடர்பாக பின்வருமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது .

**16 Regularisation of appointment.** Each appointing authority shall regularize the service of the person appointed under these rule within a period of one year from the date of his joining service, subject to eligibility.

மேற்கண்ட அரசாணையினை கருத்தில் கொண்டும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களின் பார்வை 2ல் கண்ட ஆணையின்படியும் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற்ற திருமதி. க. தமிழ்ச்செல்வி என்பவரது பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 31.07.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

8/7/23

3/4

துணை இயக்குநர்/வனஉயிரினக்காப்பாளர்
புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம்.

08.7.23

10/07/2023

பெறுநர்

திருமதி.க. தமிழ்ச்செல்வி, இளநிலை உதவியாளர்.
துணை இயக்குநர்/ வனஉயிரினக்காப்பாளர் அலுவலகம், அம்பாசமுத்திரம்.

நகல்: செயல்முறை ஆணை கோப்பு

நகல்: பணிப்பதிவேட்டிற்கு